RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
www.malaithanthi.in
DAILY EVENING
மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 204 | ஜூலை.30 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# சட்டம், சிறைத்துறை செயல்பாடுகள் குறித்து அதிகாரிகளுடன் முதலமைச்சர் விஜய் ஆலோசனை

சென்னை: ஜூலை.30-

சட்டம், சிறைத்துறை செயல்பாடுகள் குறித்து துறை சார்ந்த அதிகாரிகளுடன் முதல்வர் விஜய் ஆலோசனை மேற்கொண்டார்.

சட்டமன்ற தேர்தலுக்கு முன்பாக, தமிழக வெற்றிக் கழகம் மகளிருக்கு 2500 ரூபாய் உரிமைத்தொகை, வேலை யில்லா பட்டதாரிகளுக்கு உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளை அளித்திருந்தது. தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு கடந்த மே மாதம் 10ஆம் தேதி தவெக தலைமையில் ஆட்சி அமைந்தது. பதவியேற்பு விழாவில் பேசிய முதலமைச்சர் விஜய், நிதி நிலைமையை ஆய்வு செய்து, வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றித் தருவேன் என்று உறுதி அளித்தார்.

இந்நிலையில், தமிழ்நாடு அரசின் பட்ஜெட் கூட்டத் தொடர் ஆகஸ்ட் மாதம் 5 ஆம் தேதி நடைபெற உள்ளது. மாநில அரசின் வரவிருக்கும் பட்ஜெட்டில் இடம்பெற வேண்டிய புதிய திட்டங்கள், நடைபெற்று வரும் திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் துறைகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்வதற்காக முதலமைச்சர் தலைமையில் ஜூலை இரண்டாம் தேதி முதல் துறை ரீதியான ஆய்வுக் கூட்டம் நடத்தி வருகிறார்.

அந்த வகையில், இன்று தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் விஜய் தலைமையில் சட்டத் துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்த





பணிகள் துறை ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வு கூட்டத்தில் அமைச்சர் சி.டி.ஆர் நிர்மல்குமார், நிதி அமைச்சர் மரிய வில்சன், துறையின் செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழகத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்க ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. மேலும், வழக்குகளை விரைந்து நடத்த தேவைப்படும் இடங்களில் விரைவு நீதிமன்றம் அமைப்பது தொடர்பாக ஆலோசனை நடைபெற்றதாக கூறப்படுகிறது.

மேலும், மாவட்ட அளவில் அரசு வழக்கறிஞர்கள் நியமனங்களில் சிக்கல் ஏற்பட்ட நிலையில் இது தொடர்பாக முதலமைச்சர் ஆலோசனை நடைபெற்றதாக தகவல் வெளியாகி உள்ளது. கிராமப்புற மக்களுக்கு கட்டணமில்லா ஆலோசனைகளை வழங்கும் சட்ட ஆலோசகர்களுக்கு கௌரவ நிதி வழங்குவது குறித்து ஆலோசனையில் விவாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

சிறைகளில் செய்ய வேண்டிய அடிப்படை கட்டமைப்பு மேம்பாடுகள் தொடர்பாக ஆலோசனை செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. தமிழகத்தில் போதிய வசதிகள் இல்லாமல் குறைந்த அளவிலான கைதிகள் உள்ள சிறைகளை மூடிவிட்டு அவர்களை வேறு சிறைகளுக்கு மாற்றுவது குறித்து ஆலோசனை செய்யப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், சிறை மரணங்கள் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், இதுகுறித்து முதல்வர் ஆலோசனை செய்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

## மேற்கூரை சூரிய மின் திட்டங்களை விரைவுபடுத்த ஒருங்கிணைந்த செயலி

### அமைச்சர் நிர்மல்குமார் தகவல்



சென்னை, ஜூலை.30-

மேற்கூரை சூரியமின் திட்டங்களை விரைவுபடுத்த ஒருங் கிணைந்த செயலி அறி முகப்படுத்தப்படும் என, அமைச்சர் சி.டி.ஆர்.நிர் மல்குமார் தெரிவித்தார்.

தமிழ்நாடு மின்சாரவாரி யம் மற்றும் சென்னை ஐஐடி இடையே தொழில் நுட்ப ஒத்துழைப்புக்காக மேற்கொள்ளப்பட்ட புரிந் துணர்வு ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக, மின்துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர் மல்குமார் சென்னை ஐஐடி வளாகத்துக்கு நேற்று சென்று பல்வேறு நவீன மின்சார தொழில்நுட்பங் களை ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர் களிடம் அமைச்சர் கூறிய தாவது: தமிழகத்தை இந்தி யாவின் முன்னணி பசுமை எரிசக்தி மாநிலமாக மாற் றும் நோக்கில் பல்வேறு முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

உலகத் தரத்திலான மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பு மற்றும் பேட்டரி மறுசுழற்சி தொடர்பான விரிவான புதிய கொள்கை ஐஐடி சென்னை நிபுணர் களுடன் இணைந்து விரை வில் வெளியிடப்படும்.

மின் கட்டமைப்பின் தேவையை கருத்தில் கொண்டு, ஆய்வின் அடிப் படையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கு வெளிப்படையான மற்றும் அறிவியல் சார்ந்த அனு மதி நடைமுறை செயல் படுத்தப்படும்.

மேற்கூரை சூரியமின் திட்டங்களை விரைவுபடுத் தும் வகையில், பொதுமக் கள் எளிதில் பயன்பெறும் புதிய கொள்கை, எளிய அனுமதி நடைமுறை மற்றும் ஒருங்கிணைந்த செயலி அறிமுகப்படுத் தப்படும்.

இதன்மூலம், மானியம், மீட்டர் பொருத்துதல், அங் கீகரிக்கப்பட்ட நிறுவனங் கள் உள்ளிட்ட அனைத்து சேவைகளும் ஒரே தளத் தில் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

தமிழ்த்தாய் வாழ்த்து

தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடப்பட வேண் டும் என்பதுதான் எங்களின் எண்ணம். தொடர்ந்து தமிழக அரசு இதற்கான அழுத்தத்தை வழங்கும்.

தமிழகத்தில் தமிழ்த் தாய் வாழ்த்துக்கு முன் னுரிமை அளிக்கப்படும்.

இவ்விவகாரத்தில் ஆளுநர் மாளிகை வழி காட்டுதல் ஏற்புடையதல்ல. கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு வழங் கப்பட்ட அரசுப் பணி ஆணையை மதுரை உயர் நீதிமன்றம் ரத்து செய்துள் ளது.

இந்த தீர்ப்புக்கான நகல் வந்தவுடன் ஆலோ சனை மேற்கொள்ளப்பட்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். மேகே தாட்டு அணை விவகாரத் தில் கர்நாடகா அரசு தன் னிச்சையாக எந்தவித கட்டுமானத்தையும் மேற் கொள்ள உச்ச நீதிமன் றம் அனுமதிக்கவில்லை.

கட்டுமானத்தை மேற் கொள்ள எந்தத் தடையும் உச்ச நீதிமன்றம் விதிக் கவில்லை எனக் கூறும் கருத்து தவறானது. விரி வான திட்ட அறிக்கைக்கு மட்டுமே அனுமதித்துள் ளனர்.

எந்த மாதிரியான முயற் சிகள் மேற்கொண்டால் அணைகட்டும் நடவடிக் கையை தடுக்க முடியும் என முதல்வர்

தொடர்ச்சியாக அதி காரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறார். இவ் வாறு அவர் கூறினார்.

## “அரசு பள்ளிகளில் வாரம் ஒருநாள் சிக்கன் பிரியாணி” முதல்வர் பரிசீலிப்பதாக அமைச்சர் ராஜ்மோகன் தகவல்

சென்னை: ஜூலை.30-

“அரசுப் பள்ளிகளில் சத்துணவு சாப்பிடும் மாணவர்களுக்கு வாரம் ஒருநாள் சிக்கன் பிரியாணி போட வேண்டும் என முதல்வர் விஜய் யிடம் பரிந்துரைத்துள்ளேன். இது பல துறைகள் சம்பந்தப்பட்டது. முதல்வர் பரிசீலனை செய்வதாக தெரிவித்திருக்கிறார்” என பள்ளிக் கல்வி அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, “அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் 85வது பட்டமளிப்பு விழாவின்போது, அமைச்சர் பொன்முடி இருந்தார். அப்போது தமிழ்த்தாய் வாழ்த்து பின்னாடிதான் பாடப்பட்டது. இது வரலாற்றிலேயே முதல் முறை நடந்ததாக சொல்வது தவறு.

தமிழ்த்தாய் வாழ்த்துக்குதான் முன்னுரிமை கொடுப்போம். இதுதான் எங்கள் நிலைப்பாடு. ஆளுநர் கலந்துகொள்ளும் நிகழ்வில் அவர் ஒன்றை கடைப்பிடிக்கலாம். தவெக அன்றும், இன்றும், என்றும் தமிழ்த்தாய் வாழ்த்தோடுதான் எங்கள் நிகழ்ச்சியை துவங்கும். தேர்தலுக்கு முன்பு முன்னாள்



முதல்வர் முக.ஸ்டாலின் ஆளுநர் மாளிகையில் ஒரு விழாவில் பங்கேற்றபோது, அவர் இருக்கும்போதே தமிழ்த்தாய் வாழ்த்தை பின்னாடிதான் பாடினார்கள்.

அரசுப் பள்ளிகளில் சத்துணவு சாப்பிடும் மாணவர்களுக்கு வாரம் ஒருநாள் சிக்கன் பிரியாணி போட வேண்டும் என முதல்வர் விஜய் யிடம் பரிந்துரைத்துள்ளேன். இது பல துறைகள் சம்மந்தப்பட்டது. முதல்வர் பரிசீலனை செய்வதாக தெரிவித்திருக்கிறார்.

திமுக, அதிமுக காலத்தில் கொண்டுவரப்பட்ட, மக்களுக்கு பயன்தரக்கூடிய நல்ல திட்டங்கள் இருந்தால், பகைமையோடு அது எந்த காரணத்துக்காகவும் நிறுத்தப்படாது. அம்மா உணவகத்தின் தரம் மேம்படுத்தப்பட்டுள்ளது. நல்ல திட்டங்களை கொண்டு வருவதில்தான் போட்டி போடுவோம்.

கொளத்தூரில் வாக்கு இயந்திரங்கள் சரிபார்ப்பு தொடர்பாக பேசியபோது, ‘ஆட்டோ கண்ணாடியைத் திருப்பினால் ஆட்டோ எப்படி ஓடும்’ என்கிற மாதிரி ஆராய்ச்சி செய்ய வேண்டியது அவர்களுடைய உரிமை. நன்றாக ஆராய்ச்சி செய்யட்டும். சட்ட ரீதியாக நாங்கள் எதையும் எதிர்க்கொள்ளத் தயாராக இருந்தோம். அவர்கள் சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

இன்னும் தோல்வி அடைந்ததற்கு காரணத்தை அவர்கள் வெளியில் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இன்ஸ்டாகிராமைச் சொல்கிறார்கள், இவிஎம் மெஷினைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உண்மை யிலேயே மக்கள் நம்பிக்கையை மீண்டும் பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்கள் ஆராய்ச்சி செய்தால் நன்றாக இருக்கும்.

தனியார் பள்ளிகள் கட்டணங்களை குறைக்காவிட்டால், ஏற்கெனவே உள்ள கட்டண நிர்ணய குழு மறு கட்டமைப்பு செய்யப்படும். அரசு நிர்ணயிக்கும் கட்டணங்களை வசூலிக்க உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும்” என்று அவர் தெரி வித்துள்ளார்.

## நான் தான் ஒரே “பவர் சென்டர்” என்றாரே முதல்வர்! மதுக்கடைகளை தனியார் மயமாக்குவதா.? பாமக கடும் எதிர்ப்பு

சென்னை, ஜூலை.30-

தமிழகத்தில் மதுக்கடைகளை தனியார் மயமாக்கும் முடிவுக்கு பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கடும் எதிர்ப்பு தெரி வித்துள்ளார்.தமிழ்நாட்டில் உள்ள மொத்தமுள்ள 4,848 மதுக்கடைகளில், நகர்ப்புறங்களில் உள்ள சுமார் 2,500 கடைகளை மட்டும் தனியார் மயமாக்க அரசு முடிவெடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.



இந்த தகவலை தொடர்ந்து அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில் தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளார். அதில் அரசு மதுக்கடைகளை தனியாருக்கு தாரை வார்ப்பது என்பது மதுப் புழக்கத்தை மேலும் அதிகரிக்கவே செய்யும். மதுக்கடைகளை மூடுவதே முழுமையான தீர்வு .

மதுக்கடைகளை தனியார் மயமாக்க தமிழக அரசு முடிவு செய்திருந்தால் அது மிகவும் கண்டிக்கத்தக்கது. தமிழக அரசின் இறுதி நோக்கம் படிப்படியாக மதுக்கடைகளை மூடி, முழு மதுவிலக்கை அமல்படுத்துவதாக இருக்க வேண்டுமே தவிர, இப்படி தனியார் வசம் ஒப்படைப்பது கூடாது.

அரசு நடத்தும் கடைகளைத் தனியாருக்குத் தாரை வார்த்தால், தமிழ்நாட்டில் மதுவின் புழக்கம் கட்டுக்கடங்காமல் அதிகரித்து மது வெள்ளமாகப் பாயும் சூழல் ஏற்படும். தமிழக அரசே மது விற்பனை செய்கிறது என்ற அவமானத்தை போக்க வேண்டும்; மதுக்கடைகளில் கூடுதல் விலை வசூலிக்கப்படுவதை கட்டுப்படுத்த முடியவில்லை என்பன போன்றவைதான் தமிழ்நாடு அரசின் இந்த முடிவுக்கு காரணம் என்று கூறப்படுகிறது. இது மூட்டைப்பூச்சிக்கு பயந்து வீட்டை கொளுத்துவதற்கு ஒப்பானதாகும் என்று சாடியுள்ளார்.

அரசே மது விற்பனை செய்கிறது என்பது மானக்கேடானது. இந்த இழுக்கை போக்குவதற்கான தீர்வு அனைத்து மதுக்கடைகளையும் மூடி முழு மதுவிலக்கை ஏற்படுத்துவதுதானே தவிர மதுக்கடைகளை தனியாரிடம் தாரை வார்ப்பது அல்ல.

கடந்த காலங்களில் (2002 -2003க்கு முன்பு) தனியார் மதுக்கடைகள் இருந்தபோது, ஓரிடத்தில் உரிமம் பெற்றுக்கொண்டு சந்து கடைகள் போல பல கிளைகளைத் திறந்து சட்டவிரோதமாக மது விற்பனை செய்ததும், கள்ளச்சாராயப் புழக்கம் அதிகரித்ததும் அரங்கேறியது. தற்போது மீண்டும் அந்த பழைய நடைமுறைக்குச் செல்வது சீர்திருத்தம் அல்ல, அது பெரிய சீர்கேடு.

முதல்வராக விஜய் அவர்கள் தலைமையிலான தவெக அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்தே, தமிழ்நாட்டில் மதுக்கடைகளை தனியார் மயமாக்குவதற்கும், வெளி மாநிலங்களில் இருந்து மதுவை கொள்முதல் செய்து விற்பனை செய்வதற்கும் ஒரு லாபி தீவிரமாக முயன்று வருவதாக செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன. இருப்பினும் தமிழ்நாட்டின் ஒற்றை அதிகார மையம் நான்தான் என்று முதலமைச்சர் விஜய் அவர்கள் மீண்டும் மீண்டும் கூறி வந்ததால் அப்படி நடக்க வாய்ப்பில்லை என்று மதுவிலக்கு ஆதரவாளர்கள் நம்பினார்கள்.

ஆனால் இப்போது வெளியாகியுள்ள செய்தி பெரும் அதிர்ச்சியளிக்கிறது. .சிறுவர்கள், மாணவர்கள், இளைஞர்கள் என அனைத்து தரப்பினரும் இன்னும் அதிக அளவில் மதுவுக்கு அடிமையாவார்கள். அப்படியொரு நிலை ஏற்பட அரசே வழிவகுக்கக் கூடாது எனவே தமிழ்நாட்டில் மதுக்கடைகளை தனியார் மயமாக்கும் முடிவை கைவிட்டு முழு மதுவிலக்கை நடைமுறைப்படுத் துவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தி உள்ளார்.

## கொடைக்கானலில் காவலர் ரகளை செய்த சம்பவம்: மருத்துவர்களிடம் வருத்தம் தெரிவித்த மாவட்ட எஸ்.பி.

பழநி: ஜூலை.30-

கொடைக்கானல் அரசு மருத்துவமனைக்குள் புகுந்து காவலர் ஒருவர் பொருட்களை சேதப்ப டுத்தி, ரகளையில் ஈடுபட்ட சம்பவம் குறித்து நேரில் விசாரித்து, மருத்துவர்களிடம் எஸ்பி ஜெயக் குமார் வருத்தம் தெரிவி த்தார்.

கடந்த ஜூலை 23ம் தேதி இரவு கொடைக்கானல் அரசு மருத்துவமனைக்கு வந்த காவலர் தங்கப் பாண்டி (42), அங்கு பணியில் இருந்த செவிலியர்களிடம் தகாத வார்த்தைகளில் பேசி, ரகளையில் ஈடுபட்டார்.

அதோடு, அங்கிருந்த மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்களை சேதப்படுத்தினார். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் பரவி சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதையடுத்து, தங்கப் பாண்டி கைது செய்யப் பட்டார். மேலும், அவரை பணியிடை நீக்கம் செய்து மாவட்ட காவல் கண் காணிப்பாளர் ஜெயக் குமார் உத்தரவிட்டார். இந்நிலையில் நேற்று கொடைக்கானல் அரசு மருத்துவமனைக்கு வந்த எஸ்பி ஜெயக்குமார், ரகளை சம்பவம் குறித்து மருத்துவர்கள், செவிலி யர்களிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, காவலர் தங்கப்பாண்டி சேதப் படுத்திய மருத்துவ உபகரணங்களை பார்வையிட்டு, அவற்றை உடனடி யாக சரிசெய்து கொடுக்க கொடைக்கானல் போலீ ஸாருக்கு அறிவுறுத் தினார். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக மருத்துவப் பணியாளர் களிடம் எஸ்பி வருத்தம் தெரிவித்தார்.



## பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டு

தேனி, ஜூலை.30-

தேனி மாவட்டத்தில் தமிழ்நாடுநாள் விழாவினை கொண்டாடும் வகையில் தமிழ்வளர்ச்சித்துறையின் சார்பில் பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்டப் பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில்பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன். வழங்கினார்.தமிழ்நாடு நாள் விழாவினை முன்னிட்டு, மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்டப் பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று இடங்களில் வெற்றிபெற்றவர்களுக்கு ரொக்கப்பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கும் வகையில், பேச்சுப்போட்டியில் முதலிடம் பெற்ற தேவாரம் இந்து நாடார் உறவின்முறை பதின்ம மேல்நிலைப்பள்ளியில் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவி மா.யாசினி, இரண்டாமிடம் பெற்ற பெரியகுளம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவி ரா.ஜெசிந்தா, மூன்றாமிடம் பெற்ற அல்லிநகரம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவி நா.அஸ்வினி மற்றும் கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்ற முத்துதேவன்பட்டியில் உள்ள தேனி மேலப் பேட்டை இந்து நாடார் உறவின்முறை பதின்ம மேல்நிலைப் பள்ளியில் 11 ஆம் வகுப்பு பயிலும் ர.பா.தனுஸ்ரீ, இரண்டாமிடம் பெற்ற இராயப்பன்பட்டி சவரி முத்து உடையார் நினைவு மேல்நிலைப்பள்ளியில் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவி சு.அதினா, மூன்றாமிடம் பெற்ற கம்பம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 9ஆம் வகுப்பு பயிலும் மாணவி மு.ஆஃபினா ரம்ஜியா ஆகியோருக்கு முதல் பரிசாக ரூ.10,000/, இரண்டாம் பரிசாக ரூ.7,000/ மூன்றாம் பரிசாக ரூ.5,000/க்கான ரொக்கத்தொகை மற்றும் பாராட்டுச்சான்றிதழினை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கி, மென்மேலும் பல வெற்றிகள் பெற மாணவிகளுக்கு வாழ்த்துகளை தெரிவித்தார்.இந்நிகழ்வில் தமிழ்வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் பாப்பாலெட்சுமி உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

## நீலகிரி மாவட்டத்தில் நுகர்வோர் காலாண்டு கூட்டம்விரைவான நடவடிக்கை எடுக்க உத்தரவு




நீலகிரி, ஜூலை.30-

நீலகிரி மாவட்ட கூடுதல் ஆட்சியர் அலுவலகத்தில், நுகர்வோர் அமைப்புகளுடனான மாவட்ட அளவிலான நுகர்வோர் காலாண்டு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்றது.மாவட்ட வருவாய் அலுவலர் வாசுகி முன்னிலை வகித்தார். மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சரவணன் வரவேற்றார்.கூட்டத்தில், கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையத்தின் செயலாளர் சிவசுப் பிரமணியம், நிர்வாகி மகேந்திர பூபதி, குன்னூர் நுகர்வோர் பாதுகாப்பு சங்க செயலாளர் ஆல்துரை, கோத்தகிரி புளூமவுண்டன் நுகர்வோர் பாதுகாப்பு சங்க செயலாளர் முகமது சலீம், நிர்வாகி முகமது இஸ்மாயில், உதகை நுகர்வோர் பாதுகாப்பு சங்க தலைவர் அர்ஜூனன், நிர்வாகி இம்ரான் உள்ளிட்ட நுகர்வோர் அமைப்புகளின் பிரதிநிதிகள் பொதுமக்கள் நலன் தொடர்பான பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.இதனைத் தொடர்ந்து பேசிய மாவட்ட ஆட்சியர் லட்சுமி பாவ்யா தண்ணீரு மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் வாசுகி, அனைத்து மாவட்டத் துறை அலுவலர்களும் நுகர்வோர் அமைப்புகளுடன் துறை வாரியான காலாண்டு ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி, அதன் அறிக்கைகளை வரும் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினர்.மேலும், பொதுமக்களுக்கு இடையூறாக தெருக்களில் கால்நடைகளை விடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், பொதுக் கழிப்பிடங்களில் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறதா என்பதை கண்காணித்து, அவை சுத்தமாக பராமரிக்கப்படுவதை நகராட்சிகள் உறுதி செய்யவும் அறிவுறுத்தப்பட்டது. நடைபாதைகள் பாதசாரிகளுக்காக மட்டுமே என்பதால், சாலையோர ஆக்கிரமிப்புகள் மற்றும் விதிமுறைகளை மீறி சாலைகளில் நிறுத்தப்படும் வாகனங்களை காவல்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் நெடுஞ் சாலைத் துறையினர் இணைந்து கண்காணித்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்,மினி பேருந்து கட்டண உயர்வு தொடர்பாக எழுந்துள்ள புகார்களை வட்டார போக்குவரத்து அலுவலர் ஆய்வு செய்து, மினி பேருந்து உரிமையாளர்களிடம் கூட்டம் நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், உதகை ரயில்வே நிலையப்பகுதியில் செயல்பட்டு வரும் பேபி ஹால் சுகாதார நிலையத்தில் அவசர சிகிச்சைக்காக மருத்துவரை நியமிக்க சுகாதாரத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்.கோத்தகிரி பகுதியில் உள்ள நீரோடைகளை நகராட்சி மூலம் தூய்மைப்படுத்தவும், உதகை ஏ.டி.சி. முதல் பேருந்து நிலையம் வரை போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்தப்படும் வாகனங்களை காவல்துறையினர் அப்புறப்படுத்தவும், கோத்தகிரி டானிங்டன் பகுதியில் உள்ள பேருந்து நிறுத்தம் முன்பு வாகனங்கள் நிறுத்தப்படுவதைத் தடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளவும், கோத்தகிரி மற்றும் பந்தலூர் பகுதிகளில் குரங்குகளின் தொல்லை அதிகரித்து வருவதால், வனத்துறையினர் அவற்றைப் பிடித்து வனப்பகுதிகளில் விடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினர்.இக்கூட்டத்தில் பல்வேறு அரசுத் துறைகளின் மாவட்ட அளவிலான அலுவலர்கள் மற்றும் நுகர்வோர் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். முடிவில், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரின் நேர்முக உதவியாளர் சங்கீதா ராணி நன்றி கூறினார்.



## ரூ.20 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் கூடுதல் மருத்துவமனை கட்டிடத்தை மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு

தேனி, ஜூலை.30-

தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், ரூ.20 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் கூடுதல் மருத்துவமனை கட்டிடத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் புதிதாக கட்டப்பட்டு வரும் கூடுதல் மருத்துவமனை கட்டிட வளாகத்தில் உள்ள தரைத்தளம், முதல்தளம் மற்றும் இரண்டாம் தளம் ஆகியவற்றை பார்வையிட்டு கட்டுமானப் பணிகளின் தன்மைக் குறித்து கேட்டறிந்ததுடன், பணிகளை திட்டமிட்ட காலத்திற்குள் விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.பின்னர், ஆண்டிபட்டி வைகை அணைக்கட்டு பகுதிக்கு சென்று, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் மீன்குஞ்சு வளர்ப்பு மையம் செயல்பட்டு வருவதை பார்வையிட்டு, பராமரிப்புகள் குறித்துக் கேட்டறிந்தார். மேலும், அப்பகுதியில் அலங்காரமீன் வளர்ப்பு மையம் செயல்பட்டு வருவதை பார்வையிட்டு விற்பனை விவரம் குறித்து கேட்டறிந்ததுடன், மீன்வளத்துறையின் மூலம் நகர்ப்பகுதியில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் நடமாடும் மீன் உணவகத்தை செயல்படுத்தி, பொதுமக்கள் விரும்பும் வகையில் சுவையான மீன் உணவுகளை வழங்கிட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.இவ்வாய்வில் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.முத்துசித்ரா, மீனவளத்துறை உதவி இயக்குநர். சௌந்திரபாண்டியன், பொதுப்பணித்துறை (கட்டிடங்கள்) உதவிப்பொறியாளர் .விக்னேஷ் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

## பழங்குடியினர்களுக்கு வன உரிமைகள் வழங்குவது தொடர்பான குழு கூட்டம்



நீலகிரி, ஜூலை.30-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், கூடலூர் வனக்கோட்டத்திற்குட்பட்ட பழங்குடியினர்களுக்கு வன உரிமைகள் வழங்குவது மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்றது. குழு

இக்கூட்டத்தில், கூடலூர் வனக்கோட்டத்திற்குட்பட்ட வனபகுதிகளில் வசிக்கும் பழங்குடியின மக்களுக்கு வன உரிமை சட்டம் 2006 இன் படி தனி நபர் உரிமைக்கோரி பெறபட்ட விண்ணப்பங்களின் மீது மாவட்ட ஆட்சித்தலைவர் வருவாய்த்துறை மற்றும் வனத்துறையினரால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், பழங்குடி மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது குறித்தும், வனப்பகுதிகளில் வாழும் மக்களின் நலன் மற்றும் வளர்ச்சி குறித்தும், வன உரிமைகள் சட்டத்தை திறம்பட செயல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்வது குறித்தும் மற்றும் பழங்குடிமக்களின் நில உரிமைகள் வாழ்வாதார மேம்பாடு குறித்தும் ஆலோசனைகளை வழங்கி, வன உரிமைகள் சட்டத்தை முழுமையாக செயல்படுத்தி, பழங்குடி மக்களின் நலனை மேம்படுத்துவதற்கு மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து உறுதுணையாக இருக்கும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.இக்கூட்டத்தில், மாவட்ட வன அலுவலர் (கூடலூர்) தேவராஜ் மாவட்ட வருவாய் அலுவலர் வாசுகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி, கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் குணசேகரன், வட்டாட்சியர்கள் முனீஷ் (கூடலூர்), துரைசாமி (பந்தலூர்), வனத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்

தேனி, ஜூலை.30-

தேனி மாவட்ட காவல்துறையினர்.பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரி.ஷி.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## வங்கியில் தவறவிட்ட 1 சவரன் தங்க செயின் மீட்பு... சிசிடிவி மூலம் கண்டுபிடித்து உரியவரிடம் ஒப்படைத்த ஜோலார்பேட்டை போலீசார்!



வாணியம்பாடி, ஜூலை.30-

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட காவேரிப்பட்டு பகுதியைச் சேர்ந்த சரளா என்ற பெண், வங்கியில் இருந்தபோது தனது 1 சவரன் தங்க செயினை தவறவிட்டதாக ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் நேற்று புகார் அளித்தார்.புகாரின் பேரில் உடனடியாக நடவடிக்கை எடுத்த ஜோலார்பேட்டை காவல் துறையினர், சம்பந்தப்பட்ட வங்கியில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமரா காட்சிகளை தீவிரமாக ஆய்வு செய்தனர்.அதில் கிடைத்த தகவல்களின் அடிப்படையில், காணாமல் போன 1 சவரன் தங்க செயினை போலீசார் விரைவாக மீட்டு, உரிய ஆவணங்களை சரிபார்த்து அதன் உரிமையாளரான சரளாவிடம் ஒப்படைத்தனர்.புகார் கிடைத்த உடனேயே விரைந்து செயல்பட்டு நகையை மீட்டு உரியவரிடம் ஒப்படைத்த ஜோலார்பேட்டை காவல் துறையினரின் நடவடிக்கைக்கு பொதுமக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

## கிருஷ்ணகிரியில்தமிழ்நாடு விவசாயிகள் விழிப்புணர்வு சங்கத்தின்ஆலோசனை கூட்டம்



கிருஷ்ணகிரி, ஜூலை.30-

கிருஷ்ணகிரியில் தமிழ்நாடு விவசாயிகள் விழிப்புணர்வு சங்கத்தின் ஆலோசனை கூட்டம் நடந்தது.கிருஷ்ணகிரியில், தமிழ்நாடு விவசாயிகள் விழிப்புணர்வு சங்கத்தின் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் நசீர்அகமது தலைமை வகித்தார். மாநில செயலாளர் ராஜா, மாநில மகளிர் செயல் தலைவர் சக்தி, மாநில துணைத் தலைவர் பால்வளம் கணேசன், மாநில துணைத் தலைவர் நுண்ணுயிர் பாசனம் சந்திரசேகர், மாநில துணைத் தலைவர் வணிகம் தணிகாசலம், வடக்கு மாவட்ட துணை செயலாளர் பைரேசன், வடக்கு மாவட்ட துணைத் தலைவர் ராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், பயிர்கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டும். கெலவரப்பள்ளி அணை பாசன நீரை சரி செய்ய வேண்டும். மாம்பழக் கூழ் தொழிற்சாலையை அரசு நடத்த வேண்டும். ஆவின் பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு 10 ரூபாய் உயர்த்த வேண்டும். உற்பத்தி மான்யம் இரட்டிப்பாக்க வேண்டும். வனத்துறைக்கு சொந்தமான நிலங்களில் பரம்பரை பரம்பரையாக வசித்து வரும் விவசாயிகளுக்கு வீட்டுமனை பட்டா வழங்கப்பட வேண்டும். சாகுபடி நிலத்துக்கு நில உரிமை வழங்க வேண்டும். வன விலங்குகளால் ஏற்படும் பயிர் சேதாரங்களுக்கு இழப்பீட்டு தொகை 10 நாட்களில் வழங்க வேண்டும். இழப்பீடு தொகை பயிருக்கு ஏற்றவாறு சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களால் கள ஆய்வு செய்து மதிப்பீடுகள் பெற்று அதற்கு ஏற்றவாறு இழப்பீடு வழங்க வேண்டும். ஆண்டிற்கு 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டும். விவசாயிகளின் மான்ய திட்டங்களுக்கு ஏற்றவாறு ஏக்கருக்கு சாகுபடி தொகை 50,000 ரூபாய் வழங்க வேண்டும். இதனால் விவசாயத்திற்கு தேவையான உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள், விதைகள் என தரமான இடுபொருட்களை வாங்கி கூடுதல் உற்பத்தி பெறவும், பருவத்திற்கு ஏற்ற கார், சம்பா, தாளடி தொகுப்பு தொகை வழங்கப்பட வேண்டும். பயிர் காப்பீடு தொகையினை அரசே செலுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில், ஒன்றிய செயலாளர் சரவணன், துணை செயலாளர் மாணிக்கம், மேற்கு மாவட்ட துணைத் தலைவர் சிவசங்கரன், பொருளாளர் முருகேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



# “விக்சித் பாரத் நோக்கில் போதைப்பொருள் இல்லா இளைஞர் இந்தியா “என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி

தேனி, ஜூலை.30-

தேனி மாவட்டம், தேனி கம்மவார் சங்கம் கல்லூரியில் இந்திய அரசின் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம், மை பாரத் கேந்திரா, தேனி மற்றும் தேனி கம்மவார் சங்கக் கல்வி நிறுவனங்கள் இணைந்து நடத்திய "விக்சித் பாரத் நோக்கில் போதைப்பொருள் இல்லா இளைஞர் இந்தியா "என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையேற்று, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கி பாராட்டினார். போதைப்பொருள் ஒழிப்பு குறித்து பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், மாவட்ட அளவில் நடனப்போட்டி, கவிதைப்போட்டி, பேச்சுப்போட்டி, ஓவியப்பட்டி, மைம்ஸ் நாடகப்போட்டி, பாட்டுப்போட்டி, முழக்கத்தொடர் எழுதுதல் போட்டி மற்றும் குறும்படம் இயக்குதல் என 8 வகையான விழிப்புணர்வுப் போட்டிகள் நடத்தப்பட்டது. இப்போட்டிகளில் முதல் 3 இடங்களில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் கேடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார். மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருட்களுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாணவர்களால் தயாரிக்கப்பட்ட விழிப்புணர்வுக் குறும்படம் ஒளிபரப்பு செய்யப்பட்டதை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டார். முன்னதாக,போதைப்பொட்களுக்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் அனைவரும் ஏற்றுக்கொண்டனர். இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட அளவில் சுமார் 500க்கும் மேற்பட்ட பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர் (மை பாரத் கேந்திரா). பிரவின்குமார், கல்லூரி முதல்வர்கள், ஒருங்கிணைப்பாளர்.கோகுல் கிருஷ்ணன் உட்பட அரசு அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தனியாருக்கு நிகராக பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

கிருஷ்ணகிரி, ஜூலை.30-

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் அருகே போத்தாபுரம் கிராமத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க கட்டிடம் முன்பு, தமிழக எழுச்சி விவசாயிகள் சங்கம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



மாநில தலைவர் வெங்கடேசன் மற்றும் மாநில பொதுச் செயலாளர் பழனி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், தனியார் நிறுவனங்களுக்கு நிகராக ஆவின் பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும், கால்நடை தீவன விலை உயர்வை அரசு கட்டுப்படுத்த வேண்டும், கால்நடைகளுக்கான காப்பீட்டுத் திட்டத்தை மேம்படுத்த வேண்டும், பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத்தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தின் போது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில், பசும்பாலுக்கான கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.45 ஆகவும், எருமைப் பாலுக்கு ரூ.55 ஆகவும் உயர்த்தி வழங்க வேண்டும், கறவை மாடுகளுக்கு 100 சதவீத இலவச காப்பீடு வழங்க வேண்டும், தனியார் நிறுவனங்களுக்கு நிகராக ஆவின் பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும், பால் உற்பத்தியாளர்களுக்கான ஊக்கத்தொகையை ரூ.3இல் இருந்து ரூ.7 ஆக உயர்த்த வேண்டும், தீவன விலை உயர்வை கட்டுக்குள் கொண்டு வர வேண்டும் மற்றும் பால் கொள்முதல் தொகையை 10 நாட்களுக்குள் வழங்க வேண்டும் என்பன இடம்பெற்றன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சங்க நிர்வாகிகள், விவசாயிகள் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் பலர் கலந்து கொண்டு, தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர். இந்த நிகழ்வின்போது விவசாய சங்கப் பிரதிநிதிகள் ராஜ் குமார், கஜேந்திரன், சங்கர், வேலு, வெங்கடேசன் உள்ளிட்ட 30க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்



# திருத்தேர்வளை கண்ணங்கோட்டை தர்ம முனிஸ்வரர் ஆலய விழாவில் வெகு சிறப்பாக நடைபெற்ற மஞ்சுவிரட்டு விழா

ஆர் எஸ் மங்கலம், ஜூலை.30-

இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் தாலுகா ஆனந்தூர் அருகே திருத்தேர்வளை பகுதியில் அமைந்துள்ள கண்ணங்கோட்டை தர்ம முனிஸ்வரர் அலைய விழா சிறப்பாக நடைபெற்றது முன்னதாக மூலவருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது அதனை தொடர்ந்து மஞ்சு விரட்டு விழா நடைபெற்றது இதில் சுற்று வட்டார பகுதியில் உள்ள கிராமங்களை சேர்ந்த ஏராளமான காளைகள் அவிழ்த்து விடப்பட்டன .காளைகளின் கழுத்தில் கட்டப்பட்டு இருந்த வேஷ்டி துண்டுகளை அவிழ்ப்பதற்கு காளைகளை இளைஞர்கள் அடக்கினார்.வெற்றி பெற்ற காளைகளுக்கும் வீரர்களுக்கும் பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது .இதில் சுற்று வட்டார பகுதியை சேர்ந்த பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்து மஞ்சு விரட்டு விழாவை கண்டு ரசித்தனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர், ஜூஜூவாடி சோதனை சாவடியில், கனிம வளங்கள் வெளிமாநிலங்களுக்கு எடுத்து செல்வதை தடுக்கும் வகையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேற்று(28.07.2026) சோதனைச் சாவடியை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், ஒசூர் வட்டார போக்குவரத்து அலுவலர் ஈஸ்வரமூர்த்தி, துணை காவல் கண்காணிப்பாளர் பாலகிருஷ்ணன், உள்ளிட்ட பலர் உள்ளனர்.




# ஜப்பான் நிலநடுக்க பலி 13 ஆக உயர்வு: மீட்பு பணிகள் தீவிரம்

டோக்கியோ, ஜூலை.30-

ஜப்பானின் கியூஷு தீவில் ஏற்பட்ட 7.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆக உயர்ந்துள்ளதாக அந்நாட்டு பிரதமர் சனே தகாய்ச்சி தெரிவித்துள்ளார். ஜப்பானின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள கியூஷு தீவின் குமாமோட்டோ பகுதியில், நேற்று மாலை 7.1 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு, இரண்டு மணி நேரத்திற்குள் திரும்பப் பெறப்பட்ட நிலையில், பல இடங்களில் கட்டிடங்கள் இடிந்து விழுந்தும், தீப்பிடித்தும் பெரும் சேதம் ஏற்பட்டது. இதில் காஷிமா நகரில் உள்ள பிரபல ஷாப்பிங் மாலின் இரண்டாவது தளம் இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் பலர் உள்ளே சிக்கிக்கொண்டனர்.

இச்சம்பவம் குறித்து ஜப்பான் பிரதமர் சனே தகாய்ச்சி செய்தியாளர்களிடம் பேசுகையில், ‘நிலநடுக்கத்தில் சிக்கி இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளனர், 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். எனது தலைமையிலேயே அவசரகால பேரிடர் மேலாண்மை தலைமையகம் அமைக்கப்பட்டு, மின்வெட்டு மற்றும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில் முடுக்கிவிடப்பட்டுள்ளன’ என்றார்.





■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், திருப்பத்தூர் மாவட்டத்தில் தடைசெய்யப்பட்ட போதைப்பொருட்கள் கட்டுப்படுத்துதல் குறித்து ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., தலைமையில் (27.07.2026) அன்று நடைபெற்றது. உடன் கூடுதல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முத்துகுமார், உதவி ஆணையர் (கலால்) வேடியப்பன், மாவட்ட சுகாதார அலுவலர் மரு. நா. கலு சிவலிங்கம், உதவி இயக்குநர் ஊராட்சிகள் (தெற்கு) முருகன், மாவட்ட மேலாளர் (டாஸமாக்) கேசவன், உணவு பாதுகாப்பு அலுவலர் விக்னேஷ், மதுவிலக்கு அமல் பிரிவு காவல் ஆய்வாளர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிகளை சேர்ந்த உள்ளாட்சித் துறை அலுவலர்கள், சுகாதாரத் துறை அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

# குன்னூர் அரசு லாலி மருத்துவமனையில் சிறப்பு டயாலிசிஸ் பிரிவு திறப்பு விழா

நீலகிரி, ஜூலை.30-

நீலகிரி மாவட்டத்தில் சிறுநீரக செயலிழப்பு நோயாளிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால், தரமான மற்றும் பாதுகாப்பான டயாலிசிஸ் சிகிச்சைக்கான தேவை நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. இந்த மருத்துவத் தேவையை கருத்தில் கொண்டு, ரோட்டரி கிளப் ஆஃப் தி நீலகிரிஸ், குன்னூர், 2021 ஆம் ஆண்டு அரசுநீ தனியார் கூட்டாண்மை (PPP) திட்டத்தின் கீழ், அரசு லாலி மருத்துவமனையில் ஆறு படுக்கைகள் கொண்ட டயாலிசிஸ் பிரிவை நிறுவியது. கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்த மையம் இடையூறு இன்றி சிறப்பாக செயல்பட்டு, குன்னூர், கோத்தகிரி மற்றும் நீலகிரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த நோயாளிகளுக்கு அரிய மருத்துவ சேவையை வழங்கி வருகிறது. இதுவரை 20,000க்கும் மேற்பட்ட டயாலிசிஸ் சிகிச்சைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.





இந்தச் சேவையின் விரிவாக்கமாக, ஹெபடைட்டிஸ் உள்ளிட்ட தொற்றுநோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கென தனிமைப்படுத்தப்பட்ட சிறப்பு டயாலிசிஸ் பிரிவு தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு தொற்று தடுப்பு நடைமுறைகளை மேலும் வலுப்படுத்துவதோடு, அனைத்து நோயாளிகளுக்கும் பாதுகாப்பான மற்றும் இடையூறு இல்லாத டயாலிசிஸ் சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்யும். இந்தத் திட்டம், ஸ்டெர்லிங் ஹாலிடே ரிசார்ட்ஸ் மற்றும் ஜென் லினன் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் தாராளமான பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த புதிய சிறப்பு டயாலிசிஸ் பிரிவை நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ். பிரிந்தா, திறந்து வைக்க உள்ளார். அரசு, ரோட்டரி மற்றும் சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்படும் நிறுவனங்கள் இணைந்து பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்தும் முயற்சியில் இது மற்றொரு முக்கிய மைல்கல்லாக அமையும்.

ரோட்டரி கிளப் ஆஃப் தி நீலகிரிஸ், மாவட்ட மக்களின் நலனுக்காக தொடர்ந்து பல்வேறு சுகாதாரத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. நோய்த்தணிப்பு மற்றும் முதியோர் பராமரிப்பு பிரிவு, வெளிநோயாளர் பிரிவு நவீனமயமாக்கல், பல் மருத்துவம் மற்றும் கண் மருத்துவப் பிரிவுகள் மேம்பாடு, மேலும் தீவிர சிகிச்சை ஆம்புலன்ஸ் சேவை போன்ற பல முக்கிய பொதுநலத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது.இந்த புதிய சிறப்பு டயாலிசிஸ் பிரிவு, நீலகிரி மாவட்ட மக்களுக்கு தரமான, பாதுகாப்பான மற்றும் மலிவான சிறுநீரக சிகிச்சை சேவையை மேலும் எளிதாகப் பெற வழிவகுக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# கர்நாடகாவின் நீர் நிலைகளை பார்வையிட தமிழக முதல்வர் விஜய்க்கு கோரிக்கை வைத்துள்ளேன்: கர்நாடக முதல்வர் டி.கே. சிவக்குமார்

பெங்களூரு, ஜூலை.30-

காவிரி விவகாரத்தில் தொலைபேசி மூலம் முதல்வர் விஜய் என்னிடம் பேசினார். கர்நாடகாவின் நீர் நிலைகளை பார்வையிட தமிழக முதல்வர் விஜய்க்கு கோரிக்கை வைத்துள்ளதாக கர்நாடக முதல்வர் டி.கே. சிவக்குமார் கூறியுள்ளார். மேகதாது பகுதி உள்ளிட்ட கர்நாடகாவின் நீர் நிலைகளை பார்வையிட முதல்வர் விஜய்க்காக ஹெலிகாப்டர் தயாராக உள்ளதாக அவர் தெரிவித்தார். மேலும் முதல்வர் விஜய் விளக்கமளிப்பதற்காக வழக்கறிஞர்கள் மற்றும் அதிகாரிகல் குழுவும் தயாராக இருப்பதாக அவர் கூறினார்

# நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி பல்லாவரத்தில் அம்பேத்கர் மக்கள் நீதி இயக்கம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

பல்லாவரம், ஜூலை.30-

செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரத்தில் அம்பேத்கர் மக்கள் நீதி இயக்கம் சார்பில், நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 29.07.2026 அன்று நடைபெற்றது.அம்பேத்கர் மக்கள் நீதி இயக்கத்தின் மாநில பொதுச் செயலாளர் புரட்சி வேங்கை வைரமுத்து அவர்களின் ஆலேசனைப்படி செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் வீர.அலெக்சாண்டர் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு, அம்பேத்கர் மக்கள் நீதி இயக்க பொறுப்பாளர் பி.தாட்சாயணி அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.






சிறப்பு அழைப்பாளர்களாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வழக்கறிஞர் மோ.சுபாஷ் மோகன், மே 17 இயக்கம் மாநில துணை அமைப்பாளர் கொண்டல்சாமி, பெரியார் உணர்வாளர் தமிழ் சாக்ரடீஸ், அம்பேத்கர் மக்கள் நீதி இயக்கம் மாநில தலைவர் இலா.பாண்டியராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.மேலும், அம்பேத்கர் மக்கள் நீதி இயக்கம் மாநில பொருளாளர் சு.சதாகர், அம்பேத்கர் மக்கள் நீதி இயக்கம் தகவல் தொழில்நுட்ப அணி மாநில செயலாளர் வ.பாஸ்கரன், அம்பேத்கர் மக்கள் நீதி இயக்கம், திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் சுகேந்தர், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் தமிழ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, ஒன்றிய மற்றும் கிளை நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள், மாணவர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு, நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தி கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் பேசிய நிர்வாகிகள், நீட் தேர்வு கிராமப்புற மற்றும் அரசு பள்ளி மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், சமூக நீதி மற்றும் சமத்துவக் கல்விக் கொள்கையை பாதுகாக்கும் வகையில் தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இறுதியாக, நீட் தேர்வை ரத்து செய்ய மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் கண்டன ஆர்ப்பாட்டம் அமைதியான முறையில் நிறைவடைந்தது.




# கட்டிக்குளத்தில் விமரிசையாக நடந்த சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் விழா: அன்னதானம், வீதி உலா சிறப்பு!

மானாமதுரை, ஜூலை .30-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடத்தில், சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளின் 169வது அவதார திருவிழா நேற்று நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். இங்கு அமைந்துள்ள கருப்பனேந்தல் மடத்தில் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளின் முதலாவது ஜீவ ஒடுக்கம் அமைந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதத்தில் சுவாமிகளின் அவதார திருவிழா நடைபெறுவது வழக்கமாகும். அந்த வகையில், 169 வது ஆண்டு விழாவை முன்னிட்டு அதிகாலையில்



சுவாமிகளுக்கு 18 வகையான மூலிகை பொருட்களால் சிறப்புத் திருமஞ்சனம் நடத்தப்பட்டது. தொடர்ந்து, ஹோமங்கள் வளர்க்கப்பட்டு புனித நீர் அடங்கிய கடங்கள் வைக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. பின்னர், புனித நீரால் அபிஷேகம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.விழாவை முன்னிட்டு கோயில் வளாகத்தில் காலை முதல் இரவு வரை தொடர்ந்து அன்னதானம் நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை கருப்பனேந்தல் மட நிர்வாகிகள், கட்டிக்குளம் கிராம பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் இணைந்து செய்திருந்தனர். இரவில் கட்டிக்குளம் கிராமத்தில் சுவாமி வீதி உலாவும், பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றன. விழாவிற்கான ஏற்பாடுகளை கட்டிக்குளம் ஸ்ரீ சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் மட நிர்வாகத்தினர் மற்றும் பக்தர்கள் செய்திருந்தனர். தகவல் தொடர்பு பணிகளை கா. சேகர் மற்றும் எம். தண்டபாணி ஒருங்கிணைத்தனர்.

# காரைக்கால்: விசைப்படகு கழிவுத்தொட்டியில் விஷவாயு தாக்கி மீனவர் உயிரிழப்பு!

காரைக்கால், ஜூலை .30-

காரைக்கால் மீன்பிடி துறைமுகத்தில் உள்ள விசைப்படகில் கழிவுகள் சேமிக்கும் தொட்டியிலிருந்து வெளியேறிய விஷவாயு தாக்கி மீனவர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. புதுச்சேரி மாநிலம், காரைக்கால் துறைமுகத்திலிருந்து ஏராளமான விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர். நேற்று இரவு கரை திரும்பிய மீனவர்கள், விசைப்படகுகளிலிருந்து மீன்களை இறக்கும் பணிகளை மேற்கொண்டனர். அப்போது, காரைக்கால் மேடு சேர்ந்த முத்துவேல் என்பவர் கழிவு மீன் சேமிப்பு அறைக்குச் சென்றபோது திடீரென மயங்கி விழுந்தார். இதைக் கண்ட சக மீனவர்களான மயிலாடுதுறையைச் சேர்ந்த கதிரவன், அபிஷேக் மற்றும் அருண் ஆகிய மூவரும் அவரை மீட்க உள்ளே சென்றனர். அவர்களும் விஷவாயு தாக்கித் திடீரென மயங்கி கீழே விழுந்தனர். உடனடியாக நால்வரும் மீட்கப்பட்டு அருகில் உள்ள காரைக்கால் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்களைப் பரிசோதித்த மருத்துவர்கள், கதிரவன் ஏற்கனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர். மற்ற மூவரும் அரசு மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இ20 எத்தனால் கலப்பு திட்டத்தில் ஊழல்; ரூ.11 கோடி நஷ்டஈடு கேட்டு ஒன்றிய பாஜக அமைச்சர் வழக்கு: போலி ஏஐ வீடியோக்களை நீக்கக்கோரி மனு

மும்பை, ஜூலை.30-

இ20 எத்தனால் கலப்பு திட்டத்தில் ஊழல் செய்ததாக ஏஐ தொழில்நுட்ப போலி வீடியோக்கள் பரப்பப்பட்ட விவகாரத்தில், 11 கோடி ரூபாய் நஷ்டஈடு கேட்டு ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி மும்பை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி, தனது பெயருக்கும் புகழுக்கும் களங்கம் விளைவிக்கும் வகையில் சமூக வலைதளங்களில் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மூலம் உருவாக்கப்பட்ட போலி வீடியோக்கள் மற்றும் தவறான தகவல்களைப் பரப்புவோருக்கு எதிராக மும்பை உயர் நீதிமன்றத்தில் 86 பக்கங்கள் கொண்ட அவதூறு வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். ஒன்றிய அரசின் இ20 எத்தனால் கலப்புத் திட்டத்தில் அவரும் அவரது குடும்பத்தினரும் முறைகேடு செய்து நிதி ஆதாயம் அடைந்ததாகப் பரப்பப்படும் வதந்திகளுக்கு 11 கோடி ரூபாய் நஷ்டஈடு கோரியுள்ளார். எத்தனால் கலப்புத் திட்டம் என்பது பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் கீழ் இயங்குவதாகவும், கடந்த 2003ம் ஆண்டு கொள்கையின்படி 2025 26ம் ஆண்டிற்குள் 20 சதவீதம் எத்தனால் கலக்கும் இலக்கை அடைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், இதில் தனது அமைச்சகத்திற்கு எவ்வித தொடர்பும் இல்லை என்றும் கட்கரி சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் தனது குரல், முகம் மற்றும் உடல்மொழியை அனுமதியின்றி அத்துமீறிப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட 26 இணையதள இணைப்புகளை உடனடியாக நீக்க வேண்டும் எனத் தனது மனுவில் வலியுறுத்தியுள்ளார்.இந்த வழக்கில் மெட்டா (ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம்), எக்ஸ், கூகுள், யூடியூப் மற்றும் ஒன்றிய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், தொலைத்தொடர்புத் துறை ஆகியவை எதிர்மனுதாரர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன. நியாயமான அரசியல் விமர்சனங்களை அல்லது கேலிகளைத் தான் தடுக்க விரும்பவில்லை என்றும், ஆனால் முற்றிலும் பொய்யான மற்றும் வசைபாடும் வகையில் உருவாக்கப்பட்ட டிஜிட்டல் உள்ளடக்கங்கள் தனது தனிப்பட்ட உரிமைகளைப் பாதிப்பதாகவும் கட்கரி தெரிவித்துள்ளார். இந்த வழக்கு நீதிபதி ஆரிஃப் எஸ். டாக்டர் அமர்வு முன்பாக விசாரணைக்கு வரவுள்ளது

# அழகப்பா பல்கலைக்கழக கல்வியியல் கல்லூரியில் கற்றல்-கற்பித்தல் உபகரணங்கள் தயாரித்தல் குறித்த பயிலரங்கம்

காரைக்குடி, ஜூலை .30-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக கல்வியியல் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சி மாணவ, மாணவிகளுக்கான கற்றல்‌ கற்பித்தல் உபகரணங்கள் தயாரித்தல் குறித்த ஒருநாள் பயிலரங்கம் நடைபெற்றது. வகுப்பறைக் கற்பித்தலை எளிமையாகவும், மாணவர்களின் ஈடுபாட்டை அதிகரிக்கும் வகையிலும் குறைந்த செலவில் புதுமையான கற்றல்‌ கற்பித்தல் உபகரணங்களை வடிவமைத்து பயன்படுத்துவது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் வள்ளல் வாழ்த்துடன் தொடங்கிய நிகழ்ச்சிக்கு கல்வியியல் கல்லூரி முதல்வர் முனைவர் ஜா. எம். மெர்லின் சசிகலா தலைமை தாங்கி, வரவேற்புரையாற்றினார்.



அப்போது, பயிலரங்கின் முக்கியத்துவம் மற்றும் எதிர்கால ஆசிரியர்களுக்கு அதன் பயன்பாடுகள் குறித்து மாணவர்களிடம் விளக்கினார்.அகஸ்தியா பன்னாட்டு பயிற்சி நிறுவனத்தின் பயிற்றுநர் திரு பி. சிவசங்கர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, கற்றல்‌ கற்பித்தல் உபகரணங்களை தயாரிக்கும் முறைகள் மற்றும் அவற்றை வகுப்பறையில் திறம்பட பயன்படுத்தும் வழிமுறைகள் குறித்து செயல்முறை விளக்கங்களுடன் பயிற்சி வழங்கினார். காலை அமர்வில், ஒலி உருவாக்கத்தை விளக்கும் வகையில் எளிய இசைக்கருவி தயாரித்தல், உறிஞ்சுக் குழாய்கள் மூலம் குறைந்த செலவில் புல்லாங்குழல் உருவாக்குதல், அதன் செயல்பாடுகள், விளையாட்டுகள் மூலம் பாடத்தில் மாணவர்களின் கவனத்தை ஈர்த்தல் மற்றும் நினைவாற்றலை மேம்படுத்தும் பயிற்சிகள் குறித்து விளக்கப்பட்டது.

பிற்பகல் அமர்வில், அகஸ்தியா பன்னாட்டு பயிற்சி நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு சோலைக்கண்ணன், விமர்சனச் சிந்தனை, தொடு உணர்வு மற்றும் அறிவியல், கணித அடிப்படையிலான செயல்பாடுகள் மூலம் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் உத்திகள் குறித்து பயிற்சி அளித்தார். மேலும், மாணவர்களின் அறிவாற்றலை வளர்க்கும் படைப்பாற்றல் செயல்பாடுகள் குறித்தும் விளக்கமளித்தார். பயிற்சியின் நிறைவில், ஆசிரியர் பயிற்சி மாணவ, மாணவிகள் கற்றல்‌ கற்பித்தல் உபகரணங்களை வகுப்பறையில் பயன்படுத்தும் பல்வேறு உத்திகளை அறிந்து கொண்டு, பயிலரங்கம் குறித்து தங்களது கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளரும், கல்லூரியின் கலை மற்றும் கைவினைப் பயிற்றுவிப்பாளருமான திருமதி என். ஷர்மிளா நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்வில் கல்லூரியின் அனைத்து பேராசிரியர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தமிழ்நாட்டில் 3 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்பு: வானிலை மையம் தகவல்

சென்னை, ஜூலை .30-

தமிழ்நாட்டில் 3 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழக கடலோரப்பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் ஒரு பலவீனமான காற்றழுத்தத் தாழ்வுப் பாதை (Trough) நிலவுகிறது. இதன் காரணமாக, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், வட கடலோர தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலை பகுதிகளில் நாளை ஒரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கனமழை பெய்யக்கூடும். இதர மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், வட கடலோர தமிழகத்தில்



ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யக்கூடும்.

மேலும், வரும் 31ம் தேதி கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் மலை பகுதிகள், நீலகிரி, தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும், ஆகஸ்ட் 1ம் தேதி கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் மலை பகுதிகள், நீலகிரி, தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று முதல் வரும் 31ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவு. வரும் 1, 2 ஆகிய தேதிகளில் தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவு, எனினும் சற்று குறையக்கூடும். சென்னையில் இன்றும் நாளையும் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை/இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான, மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 38கு செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 29கு செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.




■ கிபி.1801 முதல் சுதந்திரப் போராட்டத்தில் சிவகங்கை மாவட்டம் ஒக்கூர் யுத்தத்தில் தீக்கு இரையான தன்னரசு நாட்டு ஆறூர்வட்டகை நாட்டு கள்ளர்குலக் காவலன் நன்னி அம்பலகாரரின் ஒக்கூர் யுத்த சரித்திர வீரவணக்க நாளில் சிவகங்கை நகர் தவெக நிர்வாகியும், சமூக ஆர்வலருமான கல்பனா சபேசன் வீரவணக்கம் செலுத்தினார்.



# சென்னை ஓமந்தூரார் மெட்ரோ ரயில் நிலையத்திற்கு முதல்வர் விஜய் வருகை

சென்னை, ஜூலை.30-

சென்னை ஓமந்தூரார் மெட்ரோ ரயில் நிலையத்திற்கு முதல்வர் விஜய் வந்துள்ளார். மெட்ரோ ரயிலில் நந்தனத்தில் உள்ள மெட்ரோ ரயில் தலைமை அலுவலகத்திற்கு செல்லும் அவர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துகிறார். பிறகு, கத்திப்பாரா சென்று 2ம் கட்ட வழித்தட பணிகளை பார்வையிடுகிறார்.

# அரபிக்கடலில் மீன்களுக்கு இரையாவாய் என நடிகர் பிரகாஷ் ராஜுக்கு பாஜக எம்எல்ஏ கொலை மிரட்டல்

உடுப்பி. ஜூலை.30-

நடிகர் பிரகாஷ் ராஜுக்கு பாஜக எம்எல்ஏ கொலை மிரட்டல் விடுத்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. டெல்லி ஜந்தர் மந்தரில் கடந்த வாரம் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி சார்பில் நடந்த மாணவர்கள் போராட்டத்தில் பிரபல நடிகரும், சமூக ஆர்வலருமான பிரகாஷ் ராஜ் பங்கேற்றார். அப்போது ஒன்றிய அரசின் கல்விக்கொள்கையை அவர் கடுமையாக விமர்சித்து பேசினார். இந்நிலையில், கரப்பான்பூச்சி ஜனதா கட்சி மற்றும் காங்கிரஸ் கட்சிகளுக்கு எதிராக உடுப்பியில் பாஜக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் பங்கேற்று பேசிய



பாஜக எம்எல்ஏ யாஷ்பால் சுவர்ணா, பிரகாஷ் ராஜை கடுமையாக எச்சரித்தார். அப்போது அவர், 'நடிகர்களின் மனதில் நஞ்சை விதைப்பதை பிரகாஷ் ராஜ் நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லையெனில் அவர் அரபிக்கடலில் மீன்களுக்கு இரையாக மாறுவார். வெளிநாட்டு நிதியுதவியை பெற்றுக்கொண்டு நாட்டில் வன்முறையைத் தூண்ட கரப்பான்பூச்சி ஜனதா கட்சி முயல்கிறது. ஜந்தர் மந்தரில் நடந்த நீட் தேர்வு தொடர்பான போராட்டத்தில் பங்கேற்றவர்கள் உண்மையான மாணவர்கள் அல்ல; அவர்களின் பின்னணியைச் சோதித்தால் உண்மை வெளிவரும். இத்தகைய அரசியலைத் தொடர்ந்தால் பாஜக தொண்டர்கள் தகுந்த பதிலடி கொடுப்பார்கள்' என்று எச்சரித்தார்.இந்த ஆர்ப்பாட்டத்தில், 'இந்தியா' கூட்டணியின் தலைவர்களான ராகுல் காந்தி, அகிலேஷ் யாதவ் ஆகியோரின் முகங்களுடன் கரப்பான்பூச்சி படங்கள் ஒட்டப்பட்ட விளம்பரப் பலகைகள் மீது தலைவர்கள் பூச்சிக்கொல்லி மருந்தைத் தெளித்து தங்களது எதிர்ப்பைப் பதிவிட்டனர்.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161